நாள். 05 .01.2024

C.C. 26/2016

ம.சா. 1

திரு. சக்தி

த/பெ. வேடி

சத்தியப்பிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

1. நான் பிக்கிலி கொல்லப்பட்டியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் 2 அக்கா, 1 தங்கை. எனது தங்கை சின்னபிள்ளையை ஆஜர் எதிரி விஜயக்குமாருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். எனது தங்கை சின்னபிள்ளைக்கு சரிவர பேச தெரியாததால் எனது தங்கை இந்த தனிநபர் புகாரை தாக்கல் செய்துள்ளேன். 03.06.2009 ம் தேதி காலை 8–8.30 மணியளவில் பிக்கிலி கொல்லப்பட்டி விநாயகா ஸ்ரீ மாரியம்மன் கோவிலில் வைத்து எனது தங்கைக்கும் விஜயக்குமாருக்கும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பின்னிட்டு ஒரு வருடம் நன்றாக வாழ்ந்ததார்கள். மேற்படி ஒரு வருட காலத்தில் எனது தங்கையுடன் எவ்வித தாம்பத்திய உறவும் வைத்துக்கொள்ளாமல் பெருமா என்பவருடன் கள்ளத்தொடர்பு வைத்துக்கொண்டு எனது தங்கையை அடித்து கொடுமைப்படுத்தி எங்களது வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

2. அதன் பின்னிட்டு எனது தங்கை எனது வீட்டில் கூலி வேலை செய்து கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். எனது தங்கையுடன் சேர்ந்து வாழுமாறு எதிரிகளிடம் கேட்டபோது 1 வது எதிரி நான் அவ்வாறு தான் செய்வேன். உன் தங்கையுடன் வாழ முடியாது என்று கூறி உன்னால் முடிந்ததை செய்துக்கொள் என்று கூறிவிட்டார் 12.05.2014 ம் தேதியில் பெருமா என்ற பெண்ணை 1 வது எதிரி திருமணம் செய்யப்போவதாக தெரிந்து 1 வது எதிரியிடம் கேட்டபோது நான் அப்படித்தான் செய்வேன் என்று கூறிவிட்டார்.

3. 1 ம் எதிரிக்கும் 2ம் எதிரிக்கும் திருமணத்திற்கு தேவையான மாலை உள்ளிட்ட பொருட்களை வாங்கிக்கொண்டு எதிரிகள் அனைவரும் பென்னாகரம் வட்டம், பனைகுளம் ஊராட்சி, மணல்பள்ளம் என்ற இடத்தில் உள்ள பழனியாண்டவர் கோவிலுக்கு சென்றுவிட்டதாக கேள்விப்பட்டு நாங்கள் அங்கு சென்றோம். அப்போது 1,

2 எதிரிகள் மணக்கோலத்தில் அங்கிருந்தார்கள். அப்போது விஜயக்குமாரின் அப்பா சுரண்டையன்(எ) மாரி என்பவர் மஞ்சள் குங்குமத்தை தாலியில் வைத்து தேங்காய் தட்டினை அனைவரிடம் காட்டிக்கொண்டிருந்தார். எதிரி ராஜாமணி குத்துவிளக்கில் எண்ணை ஊற்றி விளக்கை பற்றவைத்தார். எதிரிகள் ராஜலட்சுமி, ராஜா தட்டில் வைத்திருந்த பூமாலையை எடுத்து விஜயக்குமார் கையில் கொடுத்து பெருமாவிற்கு போட சொல்லி மாலை மாற்றினார்கள்.

4. எதிரி நதியா மஞ்சள் மற்றும் பச்சரியை கலக்கி அனைவருக்கும் கொடுத்துக்கொண்டிருந்தார். சரவணன்,மாது, தம்பிதுரை, ராஜாமணி ஆகிய எதிரிகள் என்னையும், எனது தங்கை சின்னபிள்ளை, எனது பெற்றோரை தடுத்து பிடித்துக்கொண்டார்கள். எதிரி ராஜிவ்காந்தி தட்டில் இருந்த தாலியை எடுத்து விஜயக்குமார் கையில் கொடுத்து பெருமா கழுத்தில் கட்டுமாறு கூறினார். அதற்கு பின்னிட்டு பெருமாவிற்கும், விஜயக்குமாருக்கும் திருமணம் நடைபெற்றது.

5. முதல் மனைவியான எனது தங்கை உயிருடன் இருக்கும் போது இரண்டாவது திருமணம் செய்துகொண்டீர்கள் என்று கேட்டதற்கு அப்படித்தான் தெரியும் உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்று கூறினார். அதன் பின்னிட்டு எதிரிகளுக்கு எனது தங்கை சட்டஅறிவிப்பு அனுப்பினார். மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிரிகள் பதில் ஏதும் கொடுக்கவில்லை. 1,2 எதிரிகள் பிக்கிலி கொல்லப்பட்டியில் உள்ள 1 வது எதிரி வீட்டில் ஒன்றாக வாழ்ந்து வருகிறார்கள். 1,2 எதிரிகளுக்கு 28.09.2015 ல் ஜெயஸ்ரீ என்ற பெண் குழந்தை பிறந்தது. மேற்படி பெண் குழந்தை பிக்கிலியில் உள்ள அரசு பள்ளியில் படித்து வருகிறார். அதன் பின்னிட்டு 04.09.2020 ம் தேதியில் ஸ்ரீ ராகவ் என்ற ஆண் குழந்தை பிறந்தது.

6. எனது தங்கை தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு ஏற்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின் படி விஜயக்குமார் எனது தங்கையுடன் சேர்ந்து வாழ மறுத்து வருகிறார். முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே 2 வதாக பெருமாவை திருமணம் செய்துக்கொண்ட 1,2 எதிரிகளுக்கும், அவர்கள் திருமணத்தினை நடத்தி வைத்த 3 முதல் 12 எதிரிகளுக்கள் குற்றம் புரிந்திருந்தால் அவர்களுக்கு தக்க தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

1. 03.06.2009 ம் தேதியில் எனது தங்கைக்கும், 1 வது எதிரிக்கும் நடந்த திருமண ரசீது சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1** ஆகும். அசலானது தருமபுரி சார்பு நீதிமன்ற HMOP No. 82/2014 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

2. தருமபுரி சார்பு நீதிமன்ற HMOP No. 82/2014 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2** ஆகும்.

3. 1, 2 எதிரிகளின் பிறந்த குழந்தைகளின் பிறப்பு சான்றிதல் முறையே **ம.சா.ஆ.3,4** ஆகும்.

4. 28.06.2016 ம் தேதியிட்ட எதிரிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் **ம.சா.ஆ.5** ஆகும்.

5. மேற்படி சட்ட அறிவிப்பினை அனுப்பியதற்கான பதிவு தபால் ரசீது **ம.சா.ஆ.6** ஆகும்.

6. மேற்படி அறிவிப்பை எதிரிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல ஒப்புகை அட்டை (எண்ணிக்கை – 11) **ம.சா.ஆ.7** ஆகும்.

எனவே புகார்படி தீர்ப்பாக கோருகிறேன்.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**